Kurusady
CATECHISM

## புனித அந்தோணியார் ஆலயம், குருசடி

மறைக்கல்வி - வினாடிவினா 002 - அக்டோபர் 17, 2021 முதல் அக்டோபர் 23, 2021 வரை.

# இரண்டாவது வாரத்திற்கான வினாடிவினா

**சரியான பதிலை டிக் [ ✔ ] செய்யவும்** **மதிப்பெண்கள்: 100**

**கேள்வி 01**

"திருமுழுக்கில் கிறிஸ்தவ _______________ தொடங்கி வைக்கப்படுகிறது". (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 163)

[ ] அருள்வாழ்வு

[ ] கொண்டாட்டம்

[ ] பணிவாழ்வு

[ ] நம்பிக்கை

**கேள்வி 02**

நம்மை கடவுளின் சுவீகாரப் பிள்ளைகளாக மாற்றுவது எது? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 163)

[ ] ஒப்புரவு

[ ] திருமுழுக்கு

[ ] திருப்பலி

[ ] உறுதிப்பூசுதல்

**கேள்வி 03**

திருமுழுக்கின் போது குழந்தையின் நெஞ்சில் / மார்பில் குருவானவரால் பூசப்படுவது எது? (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 85)

[ ] தீர்த்த தண்ணீர்

[ ] கிறிஸ்மா எண்ணெய்

[ ] ஆயத்த எண்ணெய்

[ ] ஒலிவ எண்ணெய்

**கேள்வி 04**

திருமுழுக்கின் போது குழந்தையின் தலையில் குருவானவரால் பூசப்படுவது எது (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 85)

[ ] தீர்த்த தண்ணீர் [ ] கிறிஸ்மா எண்ணெய்

[ ] ஆயத்த எண்ணெய் [ ] ஒலிவ எண்ணெய்

**கேள்வி 05**

திருமுழுக்கின்போது கிறிஸ்தவ நம்பிக்கையைக் குறித்து குழந்தை ஒருபோதும் வெட்கப்படாமலிருக்க குருவானவர் என்ன செய்வார்? திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 85)

[ ] சிலுவை அடையாளம் வரைகிறார்

[ ] காதுகளை தொடுகிறார்

[ ] ஆசீர் அளிக்கின்றார்

[ ] தீர்த்தம் தெளிக்கிறார்

**கேள்வி 06**

உறுதிப்பூசுதல் அருளடையாத்தில் (அருள்சாதனத்தில்) பயன்படுத்தப்படும் தைலத்தின் பெயர் என்ன? (தி. ச.880-2)

[ ] தீர்த்த தைலம்

[ ] கிறிஸ்மா தைலம்

[ ] ஆயத்த தைலம்

[ ] ஒலிவ தைலம்

**கேள்வி 07**

உறுதிப்பூசுதல் அருளடையாளத்தைக் (அருள்சாதனத்தை) கொடுப்பதற்கு உச்ச அதிகாரம் கொண்டவர் யார்? (தி. ச.884-1)

[ ] பங்குக்குரு

[ ] திருத்தொண்டர்

[ ] ஆயர்

[ ] பொதுநிலையினர்

**கேள்வி 08**

உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை (அருள்சாதனத்தை) கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த பணியாளர்கள் யார்? (தி. ச.884-1)

[ ] ஆயர் / அருட்பணியாளர்

[ ] ஆயர் / திருத்தொண்டர்

[ ] ஆயர் / வேதியர்

[ ] அருட்பணியாளர் / வேதியர்

**கேள்வி 09**

இறக்கும் ஆபத்தில் இருப்பவருக்கு உறுதிப்பூசுதல் அருளடையாத்தை (அருள்சாதனத்தை) கொடுக்கும் செயலுரிமையை பெற்றவர் யார்? (தி. ச.883-3)

[ ] திருத்தொண்டர் / வேதியர்

[ ] பொதுநிலையினர் / திருத்தொண்டர்

[ ] வேதியர் / பொதுநிலையினர்

[ ] பங்குக்குரு / குரு

**கேள்வி 10**

உறுதிப்பூசுதல் அருளடையாத்தை (அருள்சாதனத்தை) பெறுவதற்கு தகுதியுடையவர்கள் யார்?. (தி. ச.889-1)

[ ] ஒப்புரவு பெற்று இன்னும் உறுதிப்பூசுதல் பெறாதவர்கள்

[ ] திருமுழுக்கு பெற்று இன்னும் உறுதிப்பூசுதல் பெறாதவர்கள்

[ ] நற்கருணை பெற்று இன்னும் உறுதிப்பூசுதல் பெறாதவர்கள்

[ ] திருமுழுக்கு பெறாமல் இன்னும் உறுதிப்பூசுதல் பெறாதவர்கள்

**கேள்வி 11**

"உறுதிப்பூசுதல் அருளடையாத்தை (அருள்சாதனத்தை) பெறுவோர் திருத்தூதர்களைப் போன்று _______________ நிரப்பப்படுகிறார்கள்".(திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 178)

[ ] அன்பால்

[ ] அருளால்

[ ] ஆவியால்

[ ] கொடையால்

**கேள்வி 12**

நிறைவு செய்யும் அருட்சாதனம் என்று அழைக்கப்படுவது எது? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 178)

[ ] திருமுழுக்கு

[ ] நோயில்பூசுதல்

[ ] குருத்துவம்

[ ] உறுதிப்பூசுதல்

**கேள்வி 13**

உறுதிப்பூசுதல் அருளடையாத்தில் (அருள்சாதனத்தில்) தூயஆவியாரின் ______________ , ____________ பொழியப்படுகின்றன. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 178)

[ ] வரங்களும், கனிகளும்

[ ] கனிகளும், கொடைகளும்

[ ] வரங்களும், கொடைகளும்

[ ] கனிகளும், அன்பும்

**கேள்வி 14**

உறுதிப்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) இவ்வாறும் அழைக்கப்படுகிறது. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 179)

[ ] அன்பின் அருளடையாளம் (அருள்சாதனம்)

[ ] சமாதானத்தின் அருளடையாளம் (அருள்சாதனம்)

[ ] விடுதலையின் அன்பின் அருளடையாளம் (அருள்சாதனம்)

[ ] நிறைவு செய்யும் அருளடையாளம் (அருள்சாதனம்)

**கேள்வி 15**

"கிறிஸ்துவுக்கும் நற்செய்திக்கும் சான்றுபகர _________ வழியாக ஒரு கிறிஸ்தவர் அனுப்பி வைக்கப்படுகிறார். (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 179)

[ ] திருமுழுக்கு

[ ] உறுதிப்பூசுதல்

[ ] திருமணம்

[ ] குருத்துவம்

**கேள்வி 16**

உறுதிப்பூசுதல் அருளடையாளத்தை (அருள்சாதனத்தை) ஒருவர் பெறுவதற்கு தமிழக ஆயர் பேரவை பரிந்துரைத்துள்ள வயது எத்தனை? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 179)

[ ] 10

[ ] 9

[ ] 12

[ ] 11

**கேள்வி 17**

உறுதிப்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) வழியாக பொழியப்படும் தூய ஆவியாரின் கொடைகள் எத்தனை? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 163)

[ ] 8

[ ] 5

[ ] 12

[ ] 7

**கேள்வி 18**

உறுதிப்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) வழியாக உள்ளத்தில் பொழியப்படும் தூய ஆவியாரின் கனிகள் எத்தனை? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 163)

[ ] 9

[ ] 5

[ ] 12

[ ] 7

**கேள்வி 19**

உறுதிப்பூசுதல் பெறுவோரின் பெயரை சொல்லி ஆயர் நெற்றியில் கிறிஸ்மா என்னும் திருத்தைலத்தால் சிலுவை அடையாளம் வரைந்து என்ன கூறுவார்? (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 180)

[ ] தூய ஆவியை பெற்றுக்கொள்வாயாக

[ ] தூய ஆவியின் முத்திரையை பெற்றுக்கொள். பரமதந்தையின் உன்னத கொடை அவரே

[ ] தூய ஆவியின் கொடைகளை பெற்றுக் கொள்வாயாக

[ ] தூய ஆவியின் கனிகளை பெற்றுக் கொள்வாயாக

**கேள்வி 20**

உறுதிப்பூசுதல் அருட்சாதனம் பெறுவோர் குறைந்தது எத்தனை மாதம் பயிற்சி பெற வேண்டும் (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 184)

[ ] குறைந்தது இரண்டு மாதங்கள்

[ ] குறைந்தது மூன்று மாதங்கள்

[ ] குறைந்தது ஒரு மாதம்

[ ] குறைந்தது அரை மாதம்

**கேள்வி 21**

"உறுதிப்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) பெந்தகோஸ்தே நிகழ்வை மீண்டும் புதுப்பித்து செயல்படுத்துவது" இது சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 178)

[ ] சரி

[ ] தவறு

**கேள்வி 22**

"உறுதிப்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) இதற்கு முன் 'அவஸ்தைப்பூசுதல்' என்ற பெயரை பெற்றிருக்கவில்லை" இது சரியா தவறா எனக் குறிப்பிடுக. (திருவழிபாடு அருட்பணி. ஞா. ரோலிங்டன் பக்கம் 96)

[ ] சரி

[ ] தவறு

**கேள்வி 23**

"உறுதிப்பூசுதல் அருளடையாளம (அருள்சாதனம்) தூய ஆவியின் அருட்சாதனம் என்றழைக்கப்படுகிறது" இது சரியா அல்லது தவறா எனக் குறிப்பிடுக. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 178)

[ ] சரி

[ ] தவறு

**கேள்வி 24**

"உறுதிப்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) நற்செய்திப் பணியின் அருளடையாளம் என்றழைக்கப்படுகிறது" இது சரியா தவறா எனக் குறிப்பிடுக. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 178)

[ ] சரி

[ ] தவறு

**கேள்வி 25**

உறுதிப்பூசுதல் அருளடையாளம் (அருள்சாதனம்) அர்ப்பணவாழ்வின் அருளடையாளம் என்றழைக்கப்படுகிறது" இது சரியா தவறா எனக் குறிப்பிடுக. (திருவழிபாடு ஓர் அறிமுகம் பக்கம் 178)

[ ] சரி

[ ] தவறு

இந்த கேள்வித்தாள் உங்கள் பயிற்சிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

உங்கள் பதிலை ஆன்லைனில் சமர்ப்பிக்க, இந்த இணையதள முகவரியில் பதிவு செய்யவும்
https://www.kurusady.com/catechism/

ஆன்லைனில் சமர்ப்பிக்க முடியாதவர்கள், இந்த வினாத்தாளை அச்சிட்டு உங்கள் பதிலை டிக் [ ✔ ] செய்து பங்கு அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம்.

இப்படிக்கு,
அருட்பணி. பெர்பெச்சுவல் ஆன்றனி,
பங்கு தந்தை,
புனித அந்தோணியார் ஆலயம், குருசடி.